# இந்திய மருத்துவம்

இலக்கிய காலம் முதல்
இன்றுவரை



இந்தியா முழுவதும் பண்டைக் காலத்தில் மருத்துவம் எப்படி இருந்தது ?

இந்திய மருத்துவத்திற்கென்று பெரும் பாரம்பரியம் உண்டு.

காரணம் அன்றைய இந்தியா ஒரு நாடாக இருந்ததில்லை. பல தேசங்களாக பிரிந்து கிடந்தது. பல்வேறு மொழிகளாகவும் சிதறிக் கிடந்தது.

அதனால் நோயின் தன்மைகளை நூல்கள் வாயிலாக தெரிந்து கொள்ளமுடியாது.

அதனால் சித்தர்களும், மருத்துவர்களும் நோயை தாங்களே கண்டறிந்தனர். அதற்கு வசதியாக நோயை மூன்று விதமாக பிரித்தார்கள்.

நாடி, நடை மூலம் நோயை கண்டறியும் சூத்திரத்தை உண்டு பண்ணினார்கள்.

இந்திய மருத்துவத்தில் ஒழுக்கம், பாவம், பெற்றோரை இகழ்தல் போன்றவைகளால் கூட நோய் வரலாம் என்றார்கள்.

உதாரணமாக கண் நோய் :

மோக த்தோடு பெண் னை பார்த்த ல் , தூங்கும் பெண்க ளை மேல் வெறித்து பார்த்தல் , குளிக்கும் பெண்களை மறைந்து பார்த்த ல், சத்துக்கள் குறை வு காரணமாக கண்நோய் ஏற்படும்.

வாய்வு :

மற்ற உயிர் பிராணிகளை சித்திரவதை செய்தல் , பசுவை அடித்தல் , பல ஜீவராசிகளை கொலை செய்தால் , ஆனந்த வாயு வரும் குழந்தைகளை பயமுறுத் துதல் , உதைத்தல் , காலால் மிதித்தல், வறுமையில் வாழும் முதியோர்களை நோகச் செய்தல் ஆகியவற்றினால் வாயுக்கள் வரும் எ ன்றா ர்கள், இப்படி பல நெறிக ளின் நோயை இணைத்தார்க ள்.

இவை உண்மையா,பொய்யா என் கிற விவாதம் தேவையில்லை . அன்று சமூக மேற்கோள்கள் காட்டி வைத்தியமும் சமூக சேவைகளும் செய்தனர். இன்று பாக்டீரியா, வைரஸ், கால்சிய குறைவு, இரும்பு சத்து குறைவு, பாஸ்பரஸ் கூடுதல், உப்பு சத்து குறைவு, அல்லது கூடுதல் என உண்மையான காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் பிரச்சனை தீரவில்லை (நோய்) இன் றைய உண்மை நாளை பொய்யாகலாம்.


PDF created with pdfFactory trial version www.pdffactory.com

### அன்றும், இன்றும் :

இனி முக்கியமான நோய்கள் அன்றும், இன்றும் எப்படி தீர்ந்தது ? ஏன் தீரவில்லை ? எப்படி தீர்ப்பது ? என்பதைப் பார்க்கலாம்.

இப்படி பல கேள்விகளுக்கு விடை காண முடியவில்லை. ஆராய்ந்து பார்த்தால் சில விஷயங்கள் மட்டும் லேசாக புரிகிறது.

அரிய நூல்கள் எளிதில் கிடைக்காத மூலிகைகள், தங்கள் குருக்கள் மூலமாக அளித்தவைகளைக் கொண்டே மருந்து தயாரித்தார்கள்.

இதனால் தங்களை மிகுந்த சக்தி படைத்தவர்களாக மக்களிடம் காட்டிக் கொண்டார்கள்.

பின்னர் வைத்திய முறைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல சில அடிப்படைகளைச் சொல்லிக் கொடுத்தார்கள். முக்கியமாக 64 மூலிகைகள் தேவை என்பதை அறிந்தார்கள். அதை மிகுந்த சுவாரஸ்யத்தோடு சொன்னார்கள்.

அதற்கு முதலில் 64 பச்சிலைகளை (மூலிகைகளை) எட்டு எட்டாக பிரித்தனர். அதை எளிதில் நினைவில் வைத்துக் கொள்ளும் படியாக

1. தம்பண மூலிகைகள்
2. வசிய மூலிகைகள்
3. மோகன மூலிகைகள்
4. பேதண மூலிகைகள்
5. மாரண மூலிகைகள்
6. ஆகர்கண மூலிகைகள்
7. வித்துவேஷன் மூலிகைகள்
8. அற்சண மூலிகைகள்

என பெயரிட்டனர். இந்த மூலிகைகளின் செயல்களும் எட்டுவிதமானவை என்பதையும் விளக்கினார்கள்.

உதாரணமாக

1. தம்பணம் மூலிகைகள்

### மருத்துவ செயல்பாடு :

மனம் அமைதியில்லாமல் தவிக்கும், எதிலும் கவனம் செலுத்த முடியாது, கவனம் சிதறும், முன்கோபம், படபடப்பு என்று மனம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை நீக்கும். யோகா, மந்திரம் செபிப்போர்க்கு தியானங்கள் செய்வோருக்கு பேருதவியாக இந்த மூலிகைகள் அமைந்தன.

### சித்து உபயோகம் :


PDF created with pdfFactory trial version www.pdffactory.com

இந்த மூலிகைகளினால் தயாரித்த மருந்தை முறைப்படி தொடர்ச்சியாக அருந்தினால் விந்து வெளியாகாது. பெண்களோடு உடலுறவு கொண்டாலும் வெளியாகாது. மாற்று மருந்து அருந்தினால்தான் வெளியாகும். இதனால் எத்தனை பெண்களோடும் உறவு கொள்ளலாம் எனவும் அறிந்து கூறப்பட்டுள்ளது.

இயற்கை குணம் :

இம்மூலிகைகள் இயற்கை குணமே தம்பணம் தான். அதாவது நோயாளி எந்த நோயாலும் பாதிக்கப்பட்டு இருக்கும் போது இம்மூலிகைகள் அந்த நோயை மேலும் பரவ விடாமல், அதிகரிக்க விடாமல் அதே நிலையில் வைக்கிறது. ஆகையினால் எந்த மருந்து தயாரித்தாலும் “வாத, வலிப்பு நோய்கள் நீங்கலாக” தம்பண மூலிகை ஒன்றிலிருந்து வேர்பாகமோ, பூவோ, காயோ, கனியோ, சாறுகளோ, விதையோ, இவையோ ஒரே அளவு கலக்கப்படுகின்றது. இதனால் மருந்து அருந்தும் போது உள்ள நிலையிலேயே பரவவிடாமல் தடுத்து நிப்பாட்டும் தன்மையினால் நிச்சயமாக இம்மூலிகை இருக்க வேண்டும்.

வசிய மூலிகைகள்

சித்த உபயோகம் :

இம்மூலிகைகளான எட்டில் 1 இருந்தாலும் போதும் இதை திலகமாக தயாரித்து மையாக இட்டுக் கொண்டால் நாம் நினைக்கும் பெண்ணை அல்லது இதை பார்க்கும் பெண்களை தன் வசப்பட வைக்கலாம்.

மருந்து செயல்பாடு :

மனிதர்களை முதலில் நாம் பார்ப்பது முகத்தைத்தான். அதற்கடுத்து தான் மற்ற பாகங்கள். இம்மூலிகைகள் முகத்தில் தேஜஸ் கொடுக்கும் திறனுள்ளவை. மேலும் பித்த நரை, சிறு நரை முகச்சுருக்கம் மாற்றும் வல்லமை கொண்டவை. கண்களை குளிர்ச்சியாக்கி புதிய ஒளி கொடுப்பவைகள். தோல் சம்மந்தப்பட்ட அனைத்து வியாதிகளையும் நீக்கி தேகத்தை பொன்போல் மாற்றும் வல்லமை கொண்டவை. இதன்படி தம்பண மூலிகைகள் அப்படியே தம்பிக்கவைக்கின்றன. வசிய மூலிகைகள் பண்டங்கலாக பெருகாமல் இருக்க வைக்கின்றது


PDF created with pdfFactory trial version www.pdffactory.com